# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# இயேசுவும் லாசருவும்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest
Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

மரியாளும் மார்த்தாளும் கவலைப்பட்டார்கள். அவர்களுடைய சகோதரனாகிய லாசரு மிகவும் வியாதியாயிருந்தான். சகோதரிகளுக்கு அவன் சீக்கிரத்தில் மரித்துப்போவான் என்று தெரிந்தது. இயேசுவிடம் ஆள் அனுப்பினார்கள். பெத்தானியாவிலிருந்த இந்த சிறிய குடும்பத்தை இயேசு நேசித்தார்.



இயேசு லாசருவைப் பற்றி கேள்விப்பட்டபோது தன்னுடைய சீஷர்களைப் பார்த்து சொன்னார், "இந்த வியாதி மரணத்தில் முடிவதில்லை," இயேசு அநேக மையில்களுக்கு அப்பால் இருந்தாலும் கூட, லாசருவுக்கு என்ன நடக்குமென்று இயேசுவுக்கு நன்றாக தெரிந்திருந்தது.



பெத்தானியாவிற்கு செல்வதற்குமுன் இயேசு இரண்டு நாட்கள் காத்திருந்தார். பின்பு அவர் சொன்னது சீஷர்களை வியக்கவைத்தது. "லாசரு மரித்து போனான். நீங்கள் விசுவாசிப்பதற்காக நான் அங்கே இல்லாதிருந்தது நல்லது." இந்த விசித்திரமான வார்த்தையின் அர்த்தமென்ன? இயேசு என்ன செய்ய திட்டமிட்டிருந்தார்?



இயேசு
பெத்தானியாவிற்கு
வந்தபோது, லாசரு
மரித்து நான்கு நாளாயிற்று,
அவனுடைய
சரீரமானது, பிரேத
துணியில் கட்டி,



குகை போன்ற கல்லறையில்
வைக்கப்பட்டிருந்தது.

மார்த்தாள் இயேசுவை சந்திக்கச்சென்றாள். "உன்னுடைய சகோதரன் திரும்பவும் உயிர் பெறுவான்," என்று இயேசு சொன்னார்.



"எனக்குத்தெரியும் - கடைசியில் உயிர்தெழுதல் நாளில்," என்று மார்த்தாள் பதில் சொன்னாள். லாசருவை மறுபடியும் பார்க்க கடைசி நாட்கள் வரை காத்திருக்க வேண்டுமென அவள் யோசித்தாள். ஆனால் இயேசுவோ வேறொன்றை நினைத்திருந்தார்.





"நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன்,"
என்று இயேசு
மார்த்தாளிடம்
கூறினார். "என்னை
விசுவாசிக்கிறவன்
மரித்தாலும் பிழைப்பான்."
மார்த்தாள் இயேசுவை
விசுவாசித்தாள். அவர்
தேவனுடைய
குமாரன் என்று
அவளுக்குத்
தெரியும்.
ஆனால்
லாசருவுக்கு
அவர் எப்படி
உதவி செய்ய
முடியும்?

லாசரு மரணமடைந்ததினாலே எல்லோரும் துக்கமாயிருந்தார்கள்.  அவனுடைய சகோதரி மரியாள் அழுது கொண்டிருந்தாள்.  அவளுக்கு ஆறுதல் கூறின சிநேகிதர்களும் அப்படியே அழுது கொண்டிருந்தார்கள்.
இயேசுவும் அழுதார்.



இயேசு ஜனங்களுடன்
கல்லறைக்குச் சென்றார்.
அந்த கல்லறையை
ஒரு பெரிய
கல்லைக்கொண்டு
மூடியிருந்தார்கள்.



"கல்லை அப்புறப்படுத்துங்கள்,"
என்று இயேசு கட்டளையிட்டார்.
"ஆண்டவரே" மார்த்தாள்
பதிலளித்தாள்,
"இப்போது நாறுமே,
செத்து நான்கு
நாட்கள்
ஆயிற்றே."





இயேசு
கட்டளையிட்டபடியே
கல்லை அங்கிருந்த
மனிதர்கள்
அப்புறப்படுத்தினார்கள்.
பின்பு இயேசு
தன்னுடைய பரலோக
பிதாவிடம் விண்ணப்பம்
பண்ணினார்.



தேவன்
தன்னை
இவ்வுலகிற்கு
அனுப்பினார் என்று
ஜனங்கள் அறியும்படி
இயேசு ஒரு பெரிய
அற்புதத்தை
நடத்தப்போகிறார்.



"லாசருவே!"
இயேசு
சத்தமிட்டார்.
"வெளியே வா"
ஜனங்கள் கல்லறையை
ஆச்சரியத்துடன்
உன்னிப்பாக
பார்த்திருப்பார்கள்.
இயேசுவால் ஒரு
மரணமடைந்த
மனிதனை உயிர்
பெறச்செய்ய
முடியுமா?



ஆம்! பிரேதத் துணியால்
சுற்றப்பட்டவனாய்
லாசரு உயிருடன்
கல்லறையிலிருந்து
வெளியே வந்தான்.

"அவனை
கட்டவிழ்த்துவிடுங்கள்,"
இயேசு சொன்னார்,
"அவன் போகட்டும்."





அங்கு அவ்வளவு சந்தோஷம்! கண்ணீர் புன்னகையாக மாறியது. இயேசு தன்னுடைய வார்த்தையைக் காப்பாற்றினார்.

லாசரு மறுபடியும்
உயிரோடு இருக்கிறான்.
தேவனுடைய குமாரனால்
மாத்திரம்தான் மரித்த
மனிதனுக்கு உயிர்
கொடுக்கமுடியும்.



இந்த அற்புதத்தைப் பார்த்த அநேக ஜனங்கள் அவர் மேல் நம்பிக்கை வைத்தார்கள், ஆனால் சிலரோ அவருடைய எதிரிகளான ஆலயத்தலைவர்களிடம் புகார் தெரிவித்தார்கள். பொறமை நிறைந்தவர்களாய் அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள். இயேசு இதை அறிந்த போது அவர் கொஞ்ச தூரமாய்ச் சென்றார்.



# இயேசுவும் லாசருவும்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யோவான் 11

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16